# வாழ்விக்கும் வைணவம்

**ஸ்ரீவைஷ்ணவச் சுடராழி D.A.ஜோசப், பாண்டிச்சேரி**

18, 4th Cross (Upstairs) Rainbow Nagar, Pondicherry 605 011

Phone: 0413-2210187 Cell. 9600824414

Web: www.dajoseph.com Email: deyeje@yahoo.com

பிரேத ஜென்மத்தை அடைந்தவன் தானும் துன்புற்று, தன் குடும்பத்தாரையும் வருத்துவான் என்று பெருமாள் புள்ளரசனுக்குக் கூறும் சுவையான பகுதியில் நாம் அறிந்து கொள்ள வேண்டிய செய்திகள் அநேகம் உண்டு. "என் ஜாதகப்படி இந்நேரம் இன்னின்ன நல்ல பலன்கள் நடந்திருக்க வேண்டுமே, நடக்கவில்லையே! பொன்னும் வைரமும் கொட்டியிருக்க வேண்டுமே, ஒன்றும் கிட்டவில்லையே! என்று அங்கலாய்த்துக் கொள்பவர்களைப் பார்க்கிறோம். ஜோதிடத்துக்கும் கிரக பலன்களுக்கும் அப்பாற்பட்ட ஒரு செய்தியை இங்கே எம்பெருமான் நமக்குத் தருகிறார். மரணத்துக்குப் பிறகு ஆவியாய் அலைந்து பிரேத ஜென்மத்தினால் துன்புறுபவன், தான் பூவுலகில் வாழ்ந்த போது தன் குடும்பத்தாராக இருந்தவர்களுக்கு என்னென்ன கேடு விளைவிப்பான் என்று விளக்கிப் பெருமாள் தரும் பட்டியலைப் படிக்கும் போது நாம் அனைவரும் ஒரு முறை நம் தலையை உலுக்கிக் கொள்ள வேண்டியிருக்கிறது. பிரேத ஜென்மத்துடன் இருப்பவன் வீட்டு வாசலில் நின்று கொண்டு பித்ருக்களின் தினத்தில் வீட்டிற்கு வருகின்ற பித்ருக்களை உள்ளே வரவிடாமல் தடுத்துத் துரத்துவான். அவர்களுக்குச் சேர வேண்டிய அவிசுகளை அவனே புசிப்பான். மேலும் நடப்பதைப் பாருங்கள்:

வீட்டில் உள்ள பொருள்களைக் குடும்பத்தார் அனுபவிக்க முடியாது; சொத்துக்கள் மேல் வீண் வழக்குகள் வந்து சேரும். நிம்மதியாக உணவுகள் கூட உண்ண முடியாது, உடலில் அநாவசியமான நோய்கள் ஏற்படும்; சந்ததி விருத்தியாகாது. பிள்ளைகள் பிறக்க வேண்டிய அமைப்புள்ள தம்பதிகளுக்குக் கூட பிள்ளைகள் பிறக்க மாட்டா. ஆண் குழந்தைகள் பிறக்காமல் வரிசையாக பெண் குழந்தைகளே பிறந்து கொண்டிருக்கும். ஆண் வாரிசுகள் தோன்றினால் கூட அவை அற்ப ஆயுளில் இறந்து போகும். அல்லது ஆண்சிசுக்கள் வளர்ந்து ஆளானாலும் அவர்கள் பெற்றோருக்குப் பயன்படாமல் போவார்கள்; இல்லையென்றால் விரோதிகளாக மாறுவார்கள். சுற்றத்தாரோடு தேவையில்லாத பகை ஏற்படும். நண்பர்கள் பகைவர்களாக மாறுவார்கள். வீட்டில் வளரும் பசுக்கள் பால் தரமாட்டா.

இன்னும் பாருங்கள். ஹோமங்கள் செய்ய நினைத்தாலும் அதற்கான வசதிகள் கூடி வரமாட்டா. ஏகாதசி விரதம் போன்ற வைதீக விரதங்கள் அனுஷ்டிக்க முடியாமல் தட்டிப் போகும். நினைத்தபடி திவ்ய தேசங்களுக்குப் போக முடியாது. இழிந்தவர்களுடைய ஸ்நேகம் ஏற்படும். விவசாயம் கைக்கெட்டியும் வாய்க் கெட்டாமல் பலனில்லாமல் போகும். அநாவசிய கொலைப்பழி வந்து சேரும். திருமண முயற்சிகளில் தகுந்த மனைவியை அடைய முடியாமல் தகாத பெண் வந்து வாய்ப்பாள். கௌரவமான தொழில் வாய்ப்பு கிட்டாமல் உலகத்தார் இகழும் தொழில்கள் வந்து சேரும்.

இது மட்டுமா? மனத்தில் அதர்ம எண்ணங்கள் அதிகம் தோன்றும். நல்ல எண்ணங்கள் தோன்றினாலும் அவற்றைச் செயல்படுத்த முடியாது. மனத்தில் ஊக்கம் மறைந்து விடும். எந்நேரமும் ஒரு வகையான அச்ச உணர்வு நீடிக்கும். தீ விபத்துக்கள் நிகழும். அரசாங்க தண்டனைக்கு ஆட்பட நேரிடும். காரணமில்லாமல் நீதி மன்றத்துக்குத் தெண்டம் கட்ட நேரிடும். திருடர்கள் திருடிக் கொண்டு போவார்கள். தீராத வயிற்றுவலி போன்ற கொடிய நோய்கள் வாட்டும். நாத்திகத்தில் நாட்டம் வரும். துர்க்குணமுடையோருடைய நட்பு ஏற்படும். சாத்திரங்களை இகழ்ந்து அதனால் புண்ணியத்தை இழக்கும் வாய்ப்பு ஏற்படும்.

முகம் பொலிவிழந்து போகும். முகத்தைப் பார்த்தால் எதையோ பறிகொடுத்தது போன்ற ஒரு அமங்கலத் தோற்றம் நிரந்தரமாகக் குடிபுகும். பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் அடிக்கடி சண்டை வரும். கணவன் மனைவி சேர்ந்து வாழ முடியாது. தாற்காலிகப் பிரிவோ அடுத்தடுத்து சண்டையோ

நிரந்தர விவாகரத்தோ நிகழும். குடும்பத்தாருக்கு அடிக்கடி கெட்ட கனவுகள் வரும். நிம்மதியாகத் தூங்க முடியாது. ஆயிரம் செல்வம் இருந்தாலும் மனதில் அமைதி இருக்காது. இன்னும் எத்தனையோ வகைத் துன்பங்கள் நிகழக் காரணம் உண்டு.

இவற்றுக்கெல்லாம் பரிகாரம் என்ன? கேட்பது கருடன்; பதில் அளிக்கிறார் பரந்தாமன். அப்படி ஆவியாய் அலைந்து துன்புறும் பிரேத ஜென்ம ஆத்மாவுக்கு, சாந்தி ஏற்படும்படி புண்ணியங்கள் செய்ய வேண்டும். பெரியோர்களிடம் கலந்தாலோசித்து தர்ம விதிப்படி அந்த ஆத்மா சாந்தி அடைய உரிய புண்ணியங்களைச் செய்ய வேண்டும். புலால் உண்ணுதல், மது அருந்துதல், பொய் சொல்லுதல், தெய்வ பக்தியின்மை, பாகவத நிந்தை, ஆகியவை செய்பவர்களை பிரேத ஜென்மம் அதிகம் துன்புறுத்தும். இவற்றைக் கைவிட்டு, தானதர்மம் செய்ய வேண்டும் பித்ருக்களைக் குறித்து சிரார்த்தம் செய்ய வேண்டும். தீர்த்த யாத்திரை ஹரிநாம சங்கீர்த்தனம் ஆகியவற்றை மேற்கொள்ளலாம்.

மாமரம், தென்னைமரம், செண்பகம், அரசமரம், முதலியவற்றை வைத்துப் பயிர் செய்ய வேண்டும். மலர்ச் செடிகளை உண்டாக்கி நந்தவனம் அமைக்க வேண்டும். "இயற்கையைப் பாழாக்காதீர்கள்! மரங்கள் நடுங்கள்!" என்று நம் அரசு இன்று வாய் கிழியக் கத்துகிறதே, அதை அன்றே நாராயணன் போதித்திருக்கிறார். பசுக்கள் மேய பசும்புல் விளையும் நிலங்களை உருவாக்க வேண்டும். வேதம் கற்றோருக்குத் தானங்கள் செய்ய வேண்டும். தண்ணீருக்காக குளம் வெட்ட வேண்டும். பகவத் கைங்கர்யம், பாகவத கைங்கரியம், என்ற ஆன்மீகத் தொண்டு மனப்பான்மை வளர வேண்டும். கங்கை, யமுனை, காவிரி போன்ற புண்ணிய நதிகளில் நீராடி தான தர்மமும் செய்ய வேண்டும்.

நற்காரியங்களைச் செய்ய விடாமல் பிரேத ஜென்மங்கள் தடுக்கும் என்கிறார் பெருமாள். அதனால் தர்மச் செயல்களில் புத்தி நாடாமல் பக்தி ஏற்படாமல் போக வாய்ப்புண்டு. அந்த நேரத்தில், மேட்டு நிலத்தில் வண்டியோட்டுகிறவன் அதிக சக்தியை செலவிட்டு மேட்டைக் கடப்பது, போல மனதிடத்துடன் எண்ணங்களை ஒரு நிலைப்படுத்தி நற்காரியங்களைச் செய்ய வேண்டும். இப்படிச் செய்யும் போது அந்த ஆத்மாவுக்கு பிரேத ஜென்மம் நீங்கிப் போகும். அது மட்டுமல்ல, தன் குடும்பத்துக்கு அவன் வம்ச வ்ருத்தியைச் செய்து நல்லவை நடக்கக் காரணமாவான்.

இந்த இடத்தில் வைநதேயன் ஒரு நியாயமான கேள்வியைக் கேட்கிறான். அதாவது "நமக்கு வரும் துன்பங்கள் பிரேத ஜென்ம தோஷத்தினால் தான் என்று நமக்கு கனவிலோ, வேறு வகையாகவோ தெரியவில்லை என்று வைத்துக் கொள்வோம். அப்போது நமக்கு நேரும் துன்பங்கள் இந்த தோஷத்தினால் தான் என்று எப்படி நம்புவது?" என்று வினவுகிறான். அதற்கு பகவான் சொல்கிறார்: "சாத்திரத்தை நம்ப வேண்டும். பெரியோர் சொல்வதை அலட்சியப்படுத்தக் கூடாது. கனவு வந்தாலும் வராவிட்டாலும் உரிய சடங்குகளைச் செய்ய வேண்டும். நாராயணபலி என்ற சடங்கு இந்த சந்தர்ப்பத்தில் பிரதானமானது. அது என்னவென்று தகுந்த புரோகிதர்களிடம் கேட்டு அவர்கள் சொற்படி நடக்க வேண்டும். அதைச் செய்யுமுன் அந்த நாராயணபலி நிறைவேறாமல் போக பூத பைசாசங்கள் இடையூறு செய்யும். அந்த இடையூறுகள் நீங்க பெரியோர் சொற்படி ஸ்நானம், ஜபம், ஹோமம், தானம், தவம் இவற்றால் தன் பாவங்களை நிவர்த்தி செய்ய வேண்டும். செய்தால் இடையூறுகள் நிகழா" என்கிறார்.

இந்த இடத்தில் நாம் முற்றிலும் எதிர்பாராத ஒரு விஷயத்தை இறைவன் கூறுகிறார். பெற்றோர் பக்தி தான் அது. தெய்வ ஆராதனை, பிராம்மணபக்தி, தீர்த்த யாத்திரை, திவ்ய தேச யாத்திரை, ஆகியவற்றை ஒருவன் மேற் கொண்டாலும், அவன் தாய் தந்தையருக்குக் கீழ்ப்படியாதவனாக இருந்தால் மேற் சொன்ன தருமங்கள் அனைத்தையும் அவன் தவறாமல் செய்தாலும் அவை வீணாகும் என்கிறார். இந்தக் காலப் பிள்ளைகள் கவனிக்க வேண்டிய விஷயம். 'அன்னையும் பிதாவும் முன்னறிதெய்வம் என்று சொல்லி ஆத்தி சூடி போன்ற அறநூல்கள் ஏன் நம் கழுத்தை அறுக்கின்றன? என்று இந்தக் கால மாணவர்கள் எண்ணும் அலட்சிய நினைப்புக்குச் சாட்டையடி கொடுக்கிறார் பெருமாள். தாய் தந்தையரைப் புறக்கணித்துச் செய்யப்படும் தருமங்கள் வீணாகும் என்று கருட புராணத்திதல் காராணமில்லாமலா கண்ணன் சொல்கிறார்? இளைஞர்களே! எண்ணிப்பாருங்கள். அடுத்த மாதம் சந்திக்கிறேன்.


**கீதாசார்யன்**

7, தெற்கு மாடவீதி, திருவல்லிக்கேணி, சென்னை 600005

வருடச் சந்தா ரூ. 150

நான்கு வருடச் சந்தா ரூ. 500

ஆயுள் சந்தா ரூ. 2500